# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/28 - 2014 අගෝස්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.08.28

*1877/28 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், 888/2 ஆம் இலக்க மற்றும் 1995, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அல்லது அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எனக்கருதப்படும் ஏதாவதொரு நடைமுறைக்கு பாதிப்பு ஏற்படாவகையில் கீழ்க்குறிப்பிடப்படும் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ரி. எம். எல். சி. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

கொழும்பு,
2014, ஓகத்து 28.

1. **அமுலுக்கு வரும் திகதி** : இச்சேவைப் பிரமாணக்குறிப்பு 2013.04.05 ஆந் திகதி முதல் அமுலுக்குவருதல் வேண்டும்.

2. **நியமன அதிகாரி**: அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

3. **சேவை வகை/சேவை வகைகள்** :

3.1 சேவை வகை : நிறைவேற்றுத்துறை
சிரேஷ்ட நிறைவேற்றுத்துறை.

3.2 தரங்கள் :

| | |
|---|---|
| நிறைவேற்றுத்துறை | தரம் III |
| நிறைவேற்றுத்துறை | தரம் II |
| நிறைவேற்றுத்துறை | தரம் I |
| சிரேஷ்ட நிறைவேற்றுத்துறை | விசேட தரம் |

4. **கடமைப் பொறுப்புக்கள்** :

திணைக்களத் தலைவரிடம் ஒப்படைக்கப்படும் கட்டடக்கலைஞர் பொறுப்புக்களுக்குரியதான நடவடிக்கைகளை திட்டமிடுதல் மற்றும் திணைக்களத் தலைவரினால் நிச்சயப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்படும் கட்டடக்கலைஞர் பாடவிதானத்துக்குரிய கட்டியெழுப்பப்பட்ட சூழல், கட்டடக்கலை நிர்மாணிப்புக்கள் மற்றும் ஆலோசனை, கட்டட நிர்மாணத்துடன் இணைந்த கருத்திட்ட முகாமைத்துவம், தொல்பொருளியல் விஞ்ஞானம், கட்டடக்கலை பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகள் இச்சேவையில் பதவி வகிப்பவர்கள் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. **சம்பளங்கள்** :

5. 1 சம்பளக் குறியீட்டு இலக்கங்கள் :- நிறைவேற்றுத்துறை - SL - 1- 2006
சிரேஷ்ட நிறைவேற்றுத்துறை - SL - 3- 2006

5. 2 சம்பள அளவுத்திட்டம் :-

நிறைவேற்றுத்துறை - SL - 1- 2006 - ரூபா 22,935 - 10 x 645- 8x 790- 17x 1050 - ரூ. 53,555.

சிரேஷ்ட நிறைவேற்றுத்துறை - SL - 3- 2006 - ரூபா 42,390 - 12 x 1,310 - ரூ. 58,110.

5. 3 தரப்படுத்தல் முறைக்கமைய ஆரம்ப சம்பள படிநிலை :

| தரம் | ஆரம்ப சம்பள படிநிலை | ஆரம்ப சம்பள நிலை ரூபா |
|---|---|---|
| தரம் III | SL -1- 2006<br>1 ஆவது படிநிலை | 22,935 |
| தரம் II | SL -1- 2006<br>12 ஆவது படிநிலை | 30,175 |
| தரம் I | SL -1- 2006<br>20 ஆவது படிநிலை | 36,755 |
| விசேட தரம் | SL -3- 2006<br>1 ஆவது படிநிலை | 42,390 |

**குறிப்பு** : இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் முழுமையான தொழிற்தகைமைகளை (பட்டய கட்டடக்கலைஞர் நிலை) அல்லது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் மேற்படி நிலையினை அடையப்பெற்றால் அவ் உத்தியோகத்தர் சேவையின் மேற்படி தரத்தின் 5 ஆவது சம்பளபடிநிலையில் வைக்கப்படுவார். அவ்வாறானதொரு உத்தியோகத்தராயினும் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 03 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

6. **சேவைகளுக்குரிய பதவிகள்** :

6. 1 அனுமதிக்கப்பட்ட பதவிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை :

| அனுமதிக்கப்பட்ட பதவி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | கடமைப் பொறுப்புக்கள் |
|---|---|---|
| தரம் II/ III இலுள்ள பதவிகள் | 50 | கட்டடக்கலை நிர்மாணிப்புக்கள் மற்றும் அதற்குரிய கருத்திட்ட முகாமைத்துவம், அத்துறையிலுள்ள அலுவலர்களின் வேலைகளைக் கண்காணித்தல், முன்னேற்ற மீளாய்வு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| தரம் I இலுள்ள பதவிகள் | 05 | |
| விசேட தரத்திலுள்ள பதவிகள் | 01 | |

6. 2 இணைந்த பதவிகளின் எண்ணிக்கை :- 55 (III/II, I)
01 (விசேட தரம்)

ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு மேற்கொள்ளும் பணிக்கான III/ II, I தரங்கள் இணைந்த பதவிகளின் எண்ணிக்கையாகக் கருதப்படும்.

6. 3 பதவியின் தன்மை நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரித்துடையதும் ஆகும்.

**7. ஆட்சேர்ப்பு முறை :**

7.1 ஆட்சேர்ப்பு செய்யப்படும் விகிதாசாரம் :

| பிரிவு | வீதம் |
|---|---|
| திறந்த | 75% |
| வரையறுக்கப்பட்ட | 25% |
| திறன்கள் | - |

**குறிப்பு** : வரையறுக்கப்பட்ட பிரிவின் கீழ் தகைமைகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாதவிடத்து மேற்படி தொகையினரும் திறந்த பிரிவின் கீழ் இணைத்துக்கொள்ளப்படுவர்.

7. 2 திறந்த போட்டிப் பரீட்சையினூடான ஆட்சேர்ப்பு

7.2.1 ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம் : - இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் தரம் III

7.2. 2 தகைமைகள்

7.2.2.1 கல்வித்தகைமைகள் :- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கட்டக்கலைத்துறை/கட்டியெழுப்பப்பட்ட சூழல் தொடர்பான விஞ்ஞான இளமானி பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

7.2.2.2 தொழிற் தகைமைகள் : - முழுமையான தொழிற்தகைமைகள் (பட்டய கட்டடக்கலைஞர் நிலையினைப் பெற்றிருத்தல்.)

**குறிப்பு** :- பிரிவு 7.2.3.2. இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.

7.2.2.3 அனுபவம் :- ஏற்புடையதாகாது.

7.2.2.4 உடற்தகைமைகள் :- இலங்கை நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதிய உடற்தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.2.2.5 ஏனையவை :-

I. இலங்கை பிரஜை ஒருவராக இருத்தல்.
II. சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல்.
III. இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் திறந்த போட்டிப் பரீட்சைக்காக இரண்டு முறைக்கு மேல் தோற்றியிருத்தலாகாது.
IV. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான 7.2.2. தொடக்கம் 7.2.3 வரையான தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டுமென விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று மேற்படி தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2.3 வயது :

7.2.3.1 குறைந்த வயதெல்லை : 21 வருடங்கள்

7.2.3.2 உச்ச வயதெல்லை : 35 வருடங்கள்

**குறிப்பு** : 7.2.2.2 இன் கீழ் தகைமைகளைப் பெறும் அரச சேவையிலுள்ள ஓய்வூதிய உரித்துடைய பதவிகளை வகிக்கும் அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்படையதாகாது.

7.2.4 ஆட்சேர்ப்பு முறை :- எழுத்துமூல பரீட்சை ஒன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் எழுத்துமூல :- பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் திறன்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை :

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| பொது விவேகம் | 100 | 40 |
| பொது அறிவு | 100 | 40 |

(பின்னிணைப்பு 02 இணைப் பார்க்கவும்)

7.2.4.1. 1 பரீட்சை நடாத்தும் அதிகாரி :- பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

7.2.4.2 தொழிற்தகைமைப் பரீட்சை :- ஏற்புடையதாகாது.

7.2.4.3 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதாகாது.

7.2.4.4 பொது நேர்முகப் பரீட்சை :- தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரீட்சிக்கப்படும்.

7.2.4.4.1 பொது நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் அதிகாரி :- அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

7.2.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை :- அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரித்தல் அல்லது பகிரங்க அறிவித்தலில் பிரசுரித்தல் மற்றும் இணையத்தள அறிவித்தலில் பிரசுரித்தல் என்பனவற்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3 வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்புகள் :

7.3.1. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் :- இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் தரம் III

7.3.2 தகைமைகள்

7.3.2.1 கல்வி/தொழிற்தகைமைகள் மற்றும் அனுபவம் :-

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கட்டியெழுப்பப்பட்ட சூழல் தொடர்பான கட்டடக்கலை/விஞ்ஞான இளமானிப் பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள அரச சேவையில் ஐந்து வருட (05) நிரந்தரமானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அபிவிருத்தி உதவியாளர்கள் ;

(ii) உடன்முன்வரும் 5 வருட திருப்திகரமான சேவையினை உள்ளடக்கி அரச சேவையில் 10 வருட காலத்துடன் இலங்கை கட்டடக்கலை நிறுவகத்தின் நியமக் கற்கை நெறியின் பகுதி I இனை சித்தியெய்தியுள்ள அலுவலர்கள்.

பதவியுயர்வு பெற்ற திகதிக்கு உடன்முன்னரான 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பிலுள்ள படவரைஞர்கள்.

7.3.2.2 உடற்தகைமைகள் :- இலங்கை நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதிய உடற்தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.3.2.3 ஏனையவை :-
(i) சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் ;
(ii) தரமுயர்வு பெற்ற திகதிக்கு உடன்முன்னரான 05 வருட காலத்திற்குள் வினைத் திறனுடைய மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ;
(iii) இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக இரண்டு முறைக்கு மேல் தோற்றியிருத்தலாகாது.

7.3.3 ஆட்சேர்ப்பு முறை :- எழுத்துமூல பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் பெறுபேற்றின் அடிப்படையில் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் திறன்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும் தொகையின் இருமடங்கானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகளை எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளியுடன் சேர்க்கும் போது பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

7.3.3.1 எழுத்துமூலப் பரீட்சை :

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| கட்டடக்கலை விடயம் தொடர்பான அறிவு | 100 | 40 |
| பொது வினாப்பத்திரம் | 100 | 40 |

(பின்னிணைப்பு 03 இனைப் பார்க்கவும்).

7.3.3.1.1 பரீட்சை நடாத்தும் அதிகாரி :- பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

7.3.3.2 தொழிற்தகைமைப் பரீட்சை :- ஏற்புடையதாகாது.

7.3.3.3. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை :- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றின்மூலம் பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

| பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதாகாது |
| 2. மேலதிக தொழிற்தகைமைகள் | 20 | |
| 3. தொழில் அனுபவம் | 55 | |
| 4. நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டப்படும் திறன் | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

7.3.3.3.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழு.

7.3.3.4 பொது நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதாகாது.

7.3.4 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை : அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரித்தல் அல்லது பகிரங்க அறிவித்தலில் பிரசுரித்தல் மற்றும் இணையத்தள அறிவித்தலில் பிரசுரித்தல் என்பனவற்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.4 திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு : ஏற்புடையதாகாது.

**8. வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை:-**

8.1

| வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை | வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருடங்களுக்குள் என்பது பற்றி | வினைத்திறன் தடை தாண்டல் எழுத்துமூல தொழில்சார் பரீட்சை/சான்றிதழ் பாடநெறி/வேறு |
|---|---|---|
| 1 ஆம் வினைத்திறன் தடை தாண்டல் | III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் (03) பூர்த்தியாவதற்குள் | பின்னிணைப்பு 04 |
| 2 ஆம் வினைத் திறன் தடை தாண்டல் | II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று மூன்று வருடங்கள் (03) பூர்த்தியாவதற்குள் | பின்னிணைப்பு 04 |
| 3 ஆம் வினைத் திறன் தடைதாண்டல் | I ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று ஐந்து வருடங்கள் (05) பூர்த்தியாவதற்குள் | பின்னிணைப்பு 04 |

8. 2 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்படுவது எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை : முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை ஒவ்வொரு வருடத்திலும் இரு தடவைகள் நடாத்தப்படும்.

8.3 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்தும் அதிகாரிகள் யாவர் என்பது :

1 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் - அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் செயலாளரின் பரிந்துரையின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம்.

2 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் - இலங்கை கட்டடக் கலைஞர்களின் நிறுவனத்தின் மூலம் முழுமையான தொழிற்தகமைகளைப் பெற்றுக்கொள்ளல். (இது அலுவலரினால் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.)

3 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் – முழுமையான தொழிற்தகைமைகளைப் பேணல். (இது அலுவலரினால் பேணப்படுதல் வேண்டும்.)

9. **மொழித் தேர்ச்சி** :

| மொழி | பெறவேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரச கரும மொழி | அரச கருமமொழியல்லாத மொழியொன்றில் சேவையில் நியமனம் பெற்ற அலுவலர் ஒருவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட முன்னர் அரச கருமமொழியொன்றில் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல் அவசிய மாகும். |
| மற்றைய அரச கருமமொழி | 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| இணைப்பு மொழி | சேவையில் நிரந்தரமாக்கப்பட முன்னர் க. பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழிப்பாடம் ஒன்றில் திறமைச் சித்தி ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடம் ஒன்றாக அல்ல.) |

10. **தரங்களிற்கு தரமுயர்வு வழங்குதல்** :

10. 1 சேவையின் III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு தரமுயர்த்துதல்

10.1.1 பொதுவான செயலாற்றுகையின் அடிப்படையில்

10.1.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்.

(i) பதவி உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் ;

(ii) சேவை வகையில் III ஆம் வகுப்பில் குறைந்தது 10 வருடங்கள் உயிர்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் 10 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும் ;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான 10 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் ;

(iv) தரமுயர்வுத் தினத்திற்கு உடன் முன்னர்ரான 05 வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் ;

(v) இணைப்பு மொழியில் தேர்ச்சி மட்டத்தினைப் பெற்றுக்கொண்டிருத்தல் அல்லது அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல் ;

(vi) மற்றைய அரச கரும மொழியில் உரிய மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

(vii) உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.1.1.2 தரமுயர்வு வழங்கும் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் II ஆம் தரத்திற்கு தரமுயர்வு வழங்குவதற்காகப் நியமன அதிகாரியிடம் உரிய உத்தியோகத்தர் மாதிரிப்படிவத்திற்கேற்ப கோரிக்கை ஒன்றை விடுக்குமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தரம் II இற்கு தரமுயர்வு வழங்கப்படும்.

10. 2 சேவையின் II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு தரமுயர்த்துதல்

10.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

(i) சேவை வகையில் தரம் II இல் 07 வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் 07 சம்பள ஏற்றங்களை உரிய தினத்தில் பெற்றிருத்தல் ;

(ii) தரமுயர்வுபெறும் திகதிக்கு உடன் ம்ுனனரான 05 வருடகாலத்திற்குள் திருப்கரமான சேவைக் காலத்தைப்பூர்த்தி செய்திருத்தல் ;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வுபெறும் தினத்திற்கு உடன் முன்னரான 07 வருட காலத்திற்குள் உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் ;

(iv) முழுமையான தொழிற் தகைமைகளைப் பெற்றிருதல் மற்றும் தொடர்ச்சியாகப் பேணல் ;

(v) கட்டடக்கலைத்துறையில் பட்டப்பின் படிப்பு ஒன்றைப் பெற்றிருத்தல்.

10.2.1. 1 தரமுயர்வு வழங்கும் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் I ஆம் தரத்திற்கு தரமுயர்வு வழங்குவதற்காக நியமன அதிகாரியிடம் உரிய உத்தியோகத்தர் மாதிரிப்படிவத்திற்கேற்ப கோரிக்கை ஒன்றை விடுக்குமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமைபெறும் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு தரமுயர்வு வழங்கப்படும்.

10.3 தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குதல்.

10.3.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்.

(i) கட்டடக்கலைத்துறையில் பட்டப்பின் படிப்பு ஒன்றைப் பெற்றிருத்தல் ;

(ii) தரமுயர்வு பெறுவதற்காக தகைமைபெறும் தினத்தில் நிறைவேற்றுத்துறை அலுவலர் வகையில் தரம் ஒன்றில் ஐந்து (05) வருட உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை ஈட்டிக்கொண்டிருத்தலும் ;

(iii) தரமுயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் தினத்தில் தகைமைபெறும் சேவை வகையில்/பதவிகளுக்குரிய நிறைவேற்றுத்துறை தரத்தில் 18 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்;

(iv) தரமுயர்வு பெறுவதற்காக தகைமைபெறும் தினத்திற்கு உடன் முன்னரான 05 வருட காலப்பகுதியினுள் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லது உயர் மட்டத்தில் நிலவுதல் ;

(v) முழுமையான தொழிற்தகமைகளை தொடர்ச்சியாக பேணல் மற்றும் தொடர்ச்சியான உறுப்புரிமையைப் பெற்றிருத்தல் ;

(vi) தரமுயர்வு பெறுவதற்காக தகைமைபெறும் தினத்திற்கு உடன் முன்னரான 05 வருட காலப்பகுதியினுள் திருப்திகரமான சேவைக்காலத்தை பெற்றிருத்தல் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனை ஒன்றுக்கு ஆளாகாதிருத்தல்.

10.3.1. 1 தரமுயர்வு வழங்கும் முறை :

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளி வழங்கல் திட்டத்திற்கிணங்க நேர்முகப்பரீட்சை சபையினால் அலுவலர்களை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி நேர்முகப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் உரிய தரத்திற்குரிய நியமனங்கள் மேற்கொள்ளப்படும்;

(ii) நேர்முகப் பரீட்சைகளில் சேவை மூப்பும் விசேட திறமையும் கவத்திற்கு கொள்ளப்படும் ;

(iii) அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் ஏற்கனவே உள்ள வெற்றியடங்களுக்கமைய நியமன அதிகாரியினால் உரிய சேவை வகைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

*11.* **பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் :**

*11. 1* தகைமைகள் :

| *பதவிகள்* | *தகைமைகள்* |
|---|---|
| இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள பதவிகள் | இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் தரம் II அல்லது அதற்கு உயர் தரத்திலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் |
| இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆம் தரத்திலுள்ள பதவிகள் | இச்சேவையின் தரம் I இலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் |
| இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் விசேட தரத்திலுள்ள பதவிகள் | இச்சேவையின் விஷேட தரத்திலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் |

*11. 2* தெரிவு முறை :

(அ) இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆம் தரத்திலுள்ள பதவிகள் — சேவையின் II ஆம் தரத்திலுள்ள அலுவலர்கள் II ஆம் தரத்திலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் I ஆம் தரத்திலுள்ள பதவிகள் — சேவையின் I ஆம் தரத்திலுள்ள அலுவலர்களிலிருந்த சேவை மூப்பு மற்றும் விசேட திறமையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் I ஆம் தரத்திலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவர். (நேர்முக சபையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்).

(இ) இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் விசேட தரத்திலுள்ள பதவிகள் — சேவையின் விசேட தரத்திலுள்ள அலுவலர்களிலிருந்து சேவை மூப்பு மற்றும் விசேட திறமையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் விசேட தரத்திலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.
(நேர்முக சபையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்).

மேலே (அ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| *பரீட்சிப்பின் பின்னர் புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தெரிவுக்காக கருத்திற்கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. சேவையில் அனுபவம் | 55 | பொருத்தமற்றது |
| 2. விசேட திறமை | 40 | |
| 3. நேர்முகப்பரீட்சையில் வெளிக்காட்டப்பட்ட விசேட திறமை | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

*12.* **சேவைக்குரிய நிபந்தனைகள் :**

*12. 1* சேவையில் உறுதிப்படுத்துவதற்கான நிபந்தனைகள் :

(அ) திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் மூன்று (3) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படல் வேண்டும். அவ் அலுவலர் முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் தேர்ச்சியுற்று மொழித்தேர்ச்சியில் கோரப்பட்ட மட்டத்தினை அடைந்திருப்பதுடன் தகுதிகாண் காலப்பகுதியில் அலுவலரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானதாகவும் இருந்தால் தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் சேவையில் அவர் உறுதிப்படுத்தப்படுவார்;

(ஆ) வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஒரு வருட பதிற்கடமை காலப்பகுதிக்கு உட்படுத்தப்படல் வேண்டும். பதிற்கடமை காலப்பகுதியில் அலுவலரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானதாகவிருந்தால் பதிற்கடமை காலப்பகுதியின் முடிவில் அலுவலரின் நியமனம் உறுதிப்படுத்தப்படும்.

12.2 பயிற்சியும் விருத்தியும் :

(அ) 3 மாதங்கள் கொண்ட ஆரம்ப அறிமுகப் பயிற்சியானது வழங்கப்படும்.

(ஆ) இது பணிப்பாளரினால் (கட்டடக்கலை சேவைகள்) ஒழுங்குபடுத்தப்பட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும்.

13. **வரைவிலக்கணம் மற்றும் பொருள்கோடல்** :

(i) "பிரமாணக் குறிப்பு" என்பது, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை பிரமாணக் குறிப்பைக் குறிக்கின்றது ;

(ii) "நடைமுறைக்குவரும் திகதி " என்பது, இப்பிரமாணக் குறிப்பானது நடைமுறைக்குவரும் திகதியை குறிக்கும்;

(iii) "சேவை" என்பது, இலங்கை கட்டடக் கலைஞர் சேவையைக் குறிக்கின்றது ;

(iv) "செயலாளர்" என்பது, அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரைக் குறிக்கும் ;

(v) "இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகம்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 01 இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தினைக் குறிக்கின்றது ;

(vi) "முழுமையான தொழிற்தகைமை" என்பது, இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தில் III ஆம் பிரிவில் தொழிற்தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்து அந் நிறுவனம் சார்பான உறுப்புரிமையைப் பெற்று பட்டய கட்டடக் கலைஞர் ஒருவராக தெரிவு செய்து அந்நிலையினைப் பேணுதல் ஆகும் ;

(vii) "இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்" என்பது, 1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க,சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஆகும் ;

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது "அ. சே. ஆ." என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் உள்ள 54 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஆகும் ;

(ix) "திருப்திகரமான சேவைக்காலம்" என்பது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகளின் 186 இன் பிரகாரம் பொருள் கொள்ளப்படும் ;

(x) "உயிர்ப்பான சேவைக் காலம்" என்பது சொந்தப் பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே கடமையில் ஈடுபட்ட காலப்பகுதியாகும். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற விடுமுறை காலப்பகுதிகளும் உயிர்ப்பான சேவைக்காலத்திற்காக கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

14. சேவையிலுள்ள தரம் III இற்கு மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உரிய வருடத்தின் யூன் மாதம் 30 ஆந் திகதியன்று அச்சேவையில் அறிக்கையிடப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

15. **உள்ளீர்ப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள்** :

புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியிலுள்ளவாறு இலங்கை கட்டடக்கலை சேவைக்குரிய சகல அலுவலர்களும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு பின்வரும் விதத்தில் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்கும் அல்லது தரத்திற்குமான நியமனத் திகதியின் அடிப்படையில் சேவைக்காலம் கணிப்பிடப்படல் வேண்டும். எனினும், உரிய அலுவலரின் சம்பள ஏற்றத் திகதியானது இவ் உள்ளீர்ப்பினால் மாற்றப்படலாகாது என்பதுடன் உள்ளீர்ப்புக்கு முன்னர் ஏற்கனவேயிருந்த சம்பள ஏற்றத் திகதியாக எவ்வித மாற்றமும் இல்லாமல் பிரயோகிகப்படல் வேண்டும். மேலும், உரிய அலுவலரினால் பெற்றுக்கொள்ளப்படும் சம்பளப்படிமுறையானது புதிய சம்பளப்படி முறைக்கு ஒத்ததாக ஆகுவதன் காரணமாக தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவிற்கமைய அடுத்து வரும் உயர்ந்த சம்பளப்படிமுறையில் அலுவலர் வைக்கப்படக்கூடாது.

(i) சேவையின் தரம் III இற்கான உள்ளீர்ப்பு :

நடைமுறைக்குவரும் தினத்தில் சேவையில் வகுப்பு II இல் தரம் II இல் உள்ள அலுவலர்கள் ;

(ii) சேவையின் தரம் II இற்கான உள்ளீர்ப்பு :

நடைமுறைக்குவரும் தினத்தில் சேவையில் வகுப்பு II இல் தரம் I இல் உள்ள அலுவலர்கள் ;

(iii) சேவையின் தரம் I இற்கான உள்ளீர்ப்பு :

(அ) நடைமுறைக்குவரும் தினத்தில் சேவையில் வகுப்பு I இல் உள்ள அலுவலர்கள் ;

(ஆ) நடைமுறைக்குவரும் தினத்தில் வகுப்பு I இற்குரிய பதவி வகிக்காத ஆனால் சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்கள்.

16. இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையில் தேவைப்படும் தேர்ச்சிகளையும் திறன்களையும் சகல அலுவலர்களும் உரிய வகையில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

17. ஒவ்வொரு நியமனம் தொடர்பாகவும் அ. சே. ஆ. மூலம் வெளியிடப்பட்டுள்ள நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

18. **ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள் :**

இப்பிரமாணக் குறிப்பிலுள்ள ஏற்பாடுகளுக்கு புறம்பான விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது அமைச்சரவையின் மூலம் அதிகாரமளிக்கப்படும் நிர்வாக அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

19. **ஏனையவை :**

இச்சேவைப் பிரமாணக்குறிப்பின் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பிரதிகளிலுள்ள விடயங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின் சிங்களப் பிரதி மேலோங்கி நிற்கும்.

**பின்னிணைப்பு 01**

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் தரம் I, தரம் II, தரம் III

| அமைச்சு/திணைக்களம்/ மாகாண சபை | பதவி | தரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| கல்வி அமைச்சு | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 03 |
| கட்டடங்கள் அமைச்சு | மேலதிகப் பணிப் பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை சேவைகள்) | விசேட தரம் | 01 |
| | பணிப்பாளர் (கட்டடக்கலை) | தரம் I | 01 |
| | சிரேஸ்ட கட்டடக் கலைஞர் | தரம் I | 02 |
| | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 10 |
| தொல்பொருளியல் திணைக்களம் | பணிப்பாளர் (கட்டடக்கலை பாதுகாப்பு) | தரம் I | 01 |
| | பி. ப. /உ. ப. (கட்டடக்கலை பாதுகாப்பு) | தரம் II/ III | 03 |
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | பணிப்பாளர் (கட்டடக்கலை) | தரம் I | 01 |
| | பி. ப. (கட்டடக் கலைஞர்)/உ. ப. | தரம் II/ III | 02 |
| வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | பி. ப./உ. ப. (கட்டடக்கலை) | தரம் II/ III | 01 |
| தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் | தரைத்தோற்ற கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 01 |
| மேல் மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 13 |
| தென் மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 03 |
| வடமேல் மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 03 |
| வடமத்திய மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 02 |
| மத்திய மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 03 |
| சப்பிரகமுவ மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 02 |
| ஊவா மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 02 |
| வட மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 01 |
| கிழக்கு மாகாண சபை | கட்டடக் கலைஞர் | தரம் II/ III | 01 |

(2013.06.30 ஆந் திகதியிலுள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட இலங்கை கட்டடக் கலைஞர் சேவை பதவிகளின் அட்டவணைக்கமைவாக).

**பின்னிணைப்பு 02 :**

இலங்கை கட்டடக் கலைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

1. பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடத்திட்டங்கள் - இப்பரீட்சையானது பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

| இல. | பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் | நேரம் மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|
| 1. | உளச்சார்பு பரீட்சை | 100 | 40 | 01 |
| 2. | பொது அறிவு | 100 | 40 | 02 |

2. பரீட்சை நடைமுறைகள் - பரீட்சை மொழி ஊடகம்.

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) பரீட்சார்த்திகள் விரும்பிய ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு :**

(i) சகல பரீட்சார்த்திகளும் இப்பரிட்சைக்குரிய 02 வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும் ;

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் குறிப்பிட்டவொரு மொழியில் மாத்திரமே தோற்றுதல் வேண்டும் ;

(iii) பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஊடக மொழியினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

(iv) ஒரு தடவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

3. பாடத்திட்டம் :

பாட எண் 01 - உளச்சார்பு பரீட்சை :

பரீட்சார்த்ததியின் தர்க்கிக்கும் ஆற்றல், பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யும் திறன், தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் என்பவற்றை தீர்மானிப்பதை நோக்காகக் கொண்டு இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

பாட எண் 02 - பொது அறிவு :

இலங்கையின் அரசியல், சமூகவியல், கலாசார மற்றும் பொருளாதார சூழலும், தேசிய மற்றும் பொருளாதார சூழலும், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நவீன விடயங்கள், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான, கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான பகுத்தறிவினை பரீட்சிக்கும் நோக்குடன் இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதி சுருக்க வினாக்களைக் கொண்டது. அதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாம் பகுதி அரைவாசி கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டமைந்தது. 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்கப்படவேண்டியதோடு அதற்காக 75 புள்ளிகள் வழங்கப்படும்.

**பின்னிணைப்பு 03**

இலங்கை கட்டடக் கலைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சை

1. பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடத்திட்டங்கள் - இப்பரீட்சையானது பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| இல. | பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான | நேரம் மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|
| 1. | கட்டடக்கலை விடயம் தொடர்பான அறிவு | 100 | 40 | 03 |
| 2. | பொது வினாத்தாள் | 100 | 40 | 02 |

2. பரீட்சை நடைமுறைகள் :- பரீட்சை மொழி ஊடகம்

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) பரீட்சார்த்திகள் விரும்பிய ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு** :

(i) சகல பரீட்சார்த்திகளும் இப்பரீட்சைக்குரிய 02 வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும் ;

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் குறிப்பிட்டவொரு மொழியில் மாத்திரமே தோற்றுதல் வேண்டும் ;

(iii) பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஊடாக மொழியினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

(iv) ஒரு தடவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்..

3. பாடத்திட்டம் :

பாட எண் 01 – கட்டடக்கலை விடயம் தொடர்பான அறிவு

இவ்வினாப்பத்திரம் கீழ்வருமாறு தயாரிக்கப்படும்.
நேரம் மூன்று மணித்தியாலயங்கள்.
பகுதி I மற்றும் II இலிருந்து இரண்டு கட்டாய வினாக்களுக்கும் (20 புள்ளிகள் வீதம்) ஏனைய 3 பகுதிகளில் உள்ள 06 வினாக்களில் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (15 புள்ளிகள் வீதம்).
சித்தியடைவதற்கான புள்ளிகள் 40% .

பகுதி I – அரச துறையில் உள்ள கட்டடக் கலைஞர் ஒருவரின் நடைமுறை வகிபாகம்

1. அரச துறை மற்றும் தனியார் துறை என்பவற்றுக்கிடையிலான கட்டடக் கலையின் பிரயோக வேறுபாடு.
2. கட்டடக் கலைஞரது வகிபாகத்தின் நோக்கெல்லை, நன்மைகள் மற்றும் தீமைகள்.
3. பொதுமக்கள் மீதான பொறுப்புக்கள்.
4. அமைப்பின் மீதான பொறுப்புக்கள்.

பகுதி II – 1. அடிப்படை ஆய்வுகளும் புலனாய்வுகளும்

2. கருத்துரு ஆக்கங்கள் மற்றும் அடிப்படை மதிப்பீடுகளுக்கான அணுகுமுறை.
3. நடைமுறைகளை திட்டமிடலும் வகுத்தலும் மற்றும் தேவையான அனுமதிகளையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்ளுதல்.
4. உரிய உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்படவேண்டிய திட்டங்களின் தொகுப்பு.
5. கட்டடக் கலையில் விரிவான வெளிக்கள திட்டங்கள் மற்றும் விபரக்குறிப்புக்கள்.
6. ஏனைய ஆலோசகர்களுடன் இணைப்பினை ஏற்படுத்தி விரிவான தரவுகளைத் தயாரித்தல், (கட்டமைக்கப்பட்ட, சேவைத் திட்டங்கள்).

பகுதி III – அமைப்பின் பணிகள் மற்றும் செயற்பாட்டு ஊடகம்

1. அமைப்பின் தூர நோக்கும் பணி நோக்கும் .
2. அமைப்பின் வகிபாகமும் பணியும்.
3. நிறுவன கட்டமைப்பு.
4. அமைப்பின் பணிகளை நிறைவேற்றும் பொழுது ஒவ்வொரு பிரிவினதும் கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் இடைத் தொடர்புகள்.
5. ஏனைய அரச நிறுவனங்களுடனான தொடர்புகள்.

பகுதி IV – கருத்திட்டத்தின் ஆரம்ப நிர்மாணக் காலப்பகுதிக்குள் கருத்திட்டத்துக்கு கட்டடக் கலைஞர்களின் பங்களிப்பு.

1. விலைமனுமப்பத்திரங்கள் மற்றும் நிறுவன மதிப்பீடுகள்.
2. பெறுகை வழிகாட்டல்கள்.
3. ஆரம்ப கேள்விப்பத்திர கூட்டங்கள் மற்றும் கேள்விப்பத்திர நடவடிக்கைகள்.
4. தொழில்நுட்ப மதிப்பீடுகளும் கேள்விப்பத்திர சபையின் வகைளும்.
5. உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களை வழங்குதலும்.

பகுதி V – கருத்திட்ட செயற்பாட்டு நடைமுறையினுள் ஒப்பந்த காலத்தின் பிற்பகுதியில் கட்டடக் கலைஞர்களின் பங்களிப்பு.

1. வேலைத்தளத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்.
2. தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்
3. நிர்மாணிப்புக் குழுவுடன் இணைப்பிணைப் பேணுதல்.
4. கட்டியெழுப்பப்பட்ட சூழலினை மதிப்பீடு செய்தல் மற்றும் பிற்பகுப்பாய்வு நடவடிக்கைகள்.
5. பராமரிப்பு கைநூல்கள்.

பாட எண் : 02 பொது வினாத்தாள்.

இவ்வினாத்தாள் 02 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு இரு பகுதிகளையும் கொண்டுள்ளது.

பகுதி I : சகல விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் பரந்தளவில் விஞ்ஞான விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி II : பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் கலை போன்ற ஏனைய பொதுவிடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டமைந்திருக்கும்.

வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :- மேற்படி வினாப்பத்திரங்களின் பல்தேர்வு வினாக்கள் அல்லது அரைவாசி கட்டமைக்கப்பட்ட வினாக்கள் அல்லது அவை இணைந்த வகையில் அமையலாம்.

**பின்னிணைப்பு 04**

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்காக 8 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடத்திட்டம்

முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை :

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடத்திட்டம்.

1. முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் :-

I. நிதி முறைமை ;

II. நிர்வாகம் ;

III. திணைக்கள ஒழுங்குவிதிகள்.

2. முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் ஒரே அமர்வில் அல்லது வேறு வேறான அமர்வுகளில் எல்லா பாடங்களிற்காக தோற்றுவதற்கு அலுவலர் ஒருவர் அனுமதிக்கப்படுவார்.

3. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குரிய காலப்பகுதி மூன்று மணித்தியாலயங்களாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குரிய ஆகக்கூடிய புள்ளி 100 ஆகும்.

*4.* பரீட்சை நடைமுறை :

I. அரச துறையில் நிதி முகாமைத்துவமும் பெறுகைச் செய்முறையும் ;

வினாப்பத்திரம் ஒன்று பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(அ) இலங்கையில் நிதிக்கட்டுப்பாடு.

* அரச நிதி முகாமைத்துவத்திற்கு பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் வரைவிலக்கணம்
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீடுகளின் நோக்கமும் முறைமைகளும்
* எதிர்பாராத செலவு நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடுகளும்
* அரசிறை
* நிதி அமைச்சரின் தத்துவங்களும் வகிபாகமும்
* பொதுத் திறைசேரியின் தத்துவங்களும் வகிபாகமும்
* ஆணைச்சீட்டும் கட்டுநிதி அதிகாரமும்
* கணக்காய்வாளர் நாயகத்தினது தத்துவங்களும் வகிபாகமும்
* அரச கணக்குகள் தொடர்பான குழு (COPA)
* அரச தொழில் முயற்சிகள் தொடர்பான குழு (COPE)

(ஆ) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் அரசிறையிலுள்ள கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அத்துடன் அவர்களது தத்துவங்கள் மற்றும் வகிபாகம்/வகை கூறுதல் அத்துடன் அவர்களது பொறுப்புக்களினது தன்மை ;

(இ) உள்ளக கணக்காய்வு ;

(ஈ) அரச செலவினத்தின் திட்டமிடலும் முகாமைத்துவமும்.

* நிறுவங்களின் நோக்கங்களையும் தொழிற்பாடுகளையும் இனங்காணல்
* அரச கொள்கைகள், நோக்கங்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் திட்டமிடலும் மதிப்பீட்டிற்கு முன்னுரிமையளித்தலும்
* வருமானம் மற்றும் செலவினம் தொடர்பில் வருடாந்த மதிப்பீட்டினை தயாரித்தலும் இறுதித் தீர்மானங்களை எடுத்தலும்

(உ) அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்தல்.

* வீரமன் நடைமுறையின் அமுலாக்கம்
* அரச துறையின் ஆளணி மற்றும் சம்பளங்களின் முகாமைத்துவம்
* மொத்தச் செலவு மதிப்பீடு மற்றும் அதற்கான திருத்தங்களை மேற்கொள்ளுதல்
* குறை நிரப்பு மதிப்பீடு

(ஊ) அரச சொத்துக்களின் இழப்புக்களும் கைவிடப்பட்டவைகளும் ;

(எ) வேறுபட்ட கணக்கீட்டுச் செயற்பாடுகள் ;

(ஏ) நிதி முகாமைத்துவத்துக்கான பணிகளை ஒப்படைத்தல் ;

(ஐ) அரச நிதியினது பாதுகாப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறைகளும் ;

(ஒ) அரசாங்க பெறுகை செய்முறை.

* அரசாங்க பெறுகை செய்முறையின் விதிக்கோவை

* அரசாங்க பெறுகை வழிகாட்டிகள்

**குறிப்பு** - பரீட்சார்த்தி ஒருவர் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

II. நிர்வாகம் :- ஒரு வினாப்பத்திரம் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(அ) தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் :

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII.

(ஆ) 2009.02.20 ஆந் திகதிய 30/1589 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவர் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

III. திணைக்கள ஒழுங்குவிதிகள்.

திணைக்கள ஒழுங்குவிதிகள் வேறுபடக்கூடும் என்பதனால் இந்தச் சேவையிலுள்ள சகல அலுவலர்களுக்கும் ஒரு பொதுப் பரீட்சையினை நடாத்துவது கடினமானதாகவுள்ளது. ஆதலால், இந்தப் பாடத்துக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன், உரிய அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் இந்தப் பரீட்சையினை நடாத்துவதற்கு சகல திணைக்களத் தலைவர்களும் நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை.

இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் தரம் II இற்கு பதவியுயர்வு பெற்ற தினத்திலிருந்து மூன்று வருட காலப்பகுதிக்குள் உரிய துறையில் முழுமையான தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இலங்கை கட்டடக் கலைஞர் நிறுவகத்தின் உறுப்புரிமையினை பெற்றிருத்தல் வேண்டும். (சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் வேளையில் முழுமையான தொழில்சார் தகைமைகளை கொண்டிருக்கும் அலுவலர்கள் அதே நிலையினைத் தொடர்ச்சியாக பேணிக்கொள்ள வேண்டும்.).

மூன்றாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

முழுமையான தொழில்சார் தகைமைகளின் நிலையானது தொடர்ச்சியாக பேணப்படல் வேண்டும்.

9 - 408

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

5 - G 20130